**பிரதான விடயங்கள் உள்ளடக்கப்பட்ட ஆவணம்**

**நிலைபேறான நிதி – குத்தகை வசதிகள்**

**மேர்சன்ட் பேங்க் ஓப் ஸ்ரீ லங்கா அன்ட் பினான்ஸ் பீஎல்சீ (MBSL)**

**1. பொருள் / சேவை – நிலைபேறான நிதி – குத்தகை வசதிகள் (Sus. Fin. - Lease)**

பச்சைவீட்டு வாயுத் தாக்கத்தைக் குறைத்தல் மற்றும் காலநிலை மாற்றத்திற்கு முகங்கொடுக்கும் நோக்கில் எடுக்கப்படுகின்ற முயற்சிகளின் பிரதான அங்கமாக அமைவது மின்சார வாகனங்களது (EV) பயன்பாட்டிற்கு மாற்றமடைவாகும். நிலைபேறான நிதிக் கொள்கையின் கீழ் மின்சார வாகனங்கள், அதாவது மோட்டார் வாகனம் மற்றும் மோட்டார் சைக்கிள்களுக்கு விசேடமான குத்தகை வசதிகள் (Lease) இத்திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. நோக்கம்**

விசேடமாக மின்சார வாகனங்களுக்காகத் திட்டமிடப்பட்ட இந்த குத்தகை வசதிகள் ஊடாக, பாரிய நிதி முதலீடுகளின்றி மின்சார வாகனங்களைப் பயன்படுத்துவதற்கு தனிநபர்களுக்கும், வர்த்தகங்களுக்கும் இதன் மூலம் வாய்ப்பு வழங்கப்படுகின்றது. குத்தகை கால அளவு, மைலேஜ் எல்லைகள் மற்றும் குத்தகைக் காலம் நிறைவடைந்ததன் பின்னர் வழங்கப்படும் மாற்று வழிகள் தொடர்பில் நெகிழ்வுத் தன்மையை வழங்கி, குத்தகைதாரரின் விருப்பம் மற்றும் தேவையின் அடிப்படையில் இதன் நிபந்தனைகள் மாற்றமடையலாம். இந்த வசதிகள் ஊடாக நிலைபேறான தன்மை மேம்படுத்தப்படுவதுடன், மின்சார வாகனங்களை பெற்றுக் கொள்வதற்காக இலகுவாக அணுகக்கூடிய மற்றும் தாங்கிக் கொள்ளக்கூடிய விலையிலான மாற்றுவழிகளும் வழங்கப்படுகின்றன.

**3. பிரதான அம்சங்கள் மற்றும் நன்மைகள்**

- சிக்கல்களற்ற குத்தகை வசதிகள்
- தனிப்பயனாக்கப்பட்ட வாடிக்கையாளர் சேவை
- வாடிக்கையாளரது மீளச் செலுத்தும் திறன் மற்றும் பணப்புழக்கத்திற்கு பொருத்தமான நெகிழ்ச்சியான மீளச் செலுத்தும் முறை
- கவர்ச்சிகரமான வட்டி வீதங்கள்
- ஆகக்குறைந்த ஆவண நடவடிக்கைகள்
- வீட்டிற்கு வந்து சேவைகளை வழங்குதல்.

**4. கடன் தொகை / வெளியீடு மற்றும் கால கட்டம்**

இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டலை அடிப்படையாகக் கொண்ட கடன் தொகை, வெளியீடு மற்றும் கால கட்டம் மாற்றமடையலாம்.

**5. தகைமைகள்**

- தனிப்பட்ட பயன்பாட்டிற்காக விண்ணப்பிக்கின்ற நபர்கள் (18 வயதிற்கு மேற்பட்ட மற்றும் 65 வயதிற்குக் குறைந்த)
- 2022 ஆம் ஆண்டு மே மாதம் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட இலங்கையின் பசுமை நிதி வகைப்படுத்தலின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வியாபார துறைகளிலும் நடைமுறையிலுள்ள வர்த்தக நிறுவனங்கள்/தனிநபர் வியாபாரம்/பங்குடமைகள்/ வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனிகள்.
- இதன் நோக்கம் மின்சார மோட்டார் வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களைக் கொள்வனவு செய்வதாகும்.

- அங்கீகரிக்கக்கூடிய / உறுதிப்படுத்தக்கூடிய கடன் மீளச் செலுத்தும் இயலுமை இருத்தல் வேண்டும்.
- திருப்திகரமான கடந்தகாலக் கொடுப்பனவு வரலாறு இருத்தல் வேண்டும். (கொடுகடன் தகவல் பணியக அறிக்கை)

## 6. வட்டி வீதம் மற்றும் ஏனைய கட்டணங்கள்

### 6.1 வட்டி வீதம்

சந்தை நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டு காலத்திற்குக் காலம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குழுவினால் (ALCO) எடுக்கப்படுகின்ற தீர்மானங்களின் அடிப்படையில் வட்டி வீதம் தீர்மானிக்கப்படுகின்றது. மேலும், வாகன வகை மற்றும் உற்பத்தி வருடம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு வருடாந்த வட்டி வீதம் 16.00% தொடக்கம் 27.00% வரை என்ற அளவில் மாற்றமடையலாம்.

### 6.2 பிற கட்டணங்கள்

#### 6.2.1. ஆவணங்களுக்கான கட்டணங்கள்

| | |
|---|---|
| இல.ரூ.499,999 வரை | இல.ரூ. 5,000.00 |
| இல.ரூ.500,000- இல.ரூ. 999,999 | இல.ரூ.9,000.00 |
| இல.ரூ. 1,000,000 – இல.ரூ.1,999,999 | இல.ரூ.11,000.00 |
| இல.ரூ. 2,000,000 – இல.ரூ.2,999,999 | இல.ரூ.12,500.00 |
| இல.ரூ. 3,000,000 – இல.ரூ.4,999,999 | இல.ரூ.15,000.00 |
| இல.ரூ. 5,000,000 - இல.ரூ.9,999,999 | இல.ரூ.20,000.00 |
| இல.ரூ. 10,000,000 இற்கு மேற்பட்ட | ஆகக்குறைந்தது இல.ரூ.25,000.00 |
| மோட்டார் சைக்கிள் குத்தகை உற்பத்தி குறியீடு 2007 - ரூபா 500,000.00 வரை | இல.ரூ.7,500.00 |
| மோட்டார் சைக்கிள் குத்தகை உற்பத்தி குறியீடு 2007 - ரூபா 500,000.00 இற்கு மேற்பட்ட | இல.ரூ.10,000.00 |

#### 6.2.2 மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் பதிவுக் கட்டணம்

அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் வாகனப் பதிவுக் கட்டணம் உரித்தாகும்.

#### 6.2.3 மாதாந்த தவணைப்பணத்தைச் செலுத்தாமை அல்லது தாமதமாகச் செலுத்துதல் தொடர்பில் அறவிடப்படுகின்ற தண்ட வட்டி (இருந்தால்)

உரிய தினத்தில் தவணைப்பணம் செலுத்தத் தவறும் சந்தர்ப்பத்தில், தாமதமாகும் காலத்திற்கு ஒரு மாதத்திற்கு மூன்று வீத (3%) மேலதிக வட்டி (Overdue interest) அறவிடப்படும்.

#### 6.2.4 பெற்றுக்கொண்ட வசதியை முன்னரே செலுத்துதல்.

கடன் பெற்றவரால் உரிய கடன் தொகை உரிய காலத்திற்கு முன்னர் செலுத்தப்படும் சந்தர்ப்பத்தில், அந்த வசதியின் மீதி வட்டிக்கு சலுகை வழங்குவது தொடர்பாக தீர்மானம் எடுக்கும் முழுமையான விருப்பம் MBSL நிறுவனத்திற்குரியது.

#### 6.2.5 பொருத்தமான ஏனைய கட்டணங்கள்

| இலக்கம் | அறவீடுகள் / கட்டணங்கள் தொடர்பான விபரங்கள் | அறவீடுகள் / கட்டணம் (இல.ரூபா) |
|---|---|---|
| 1 | மீதியை உறுதிப்படுத்தும் கடிதம் | 1,000.00 |
| 2 | நிலுவைத் தொகை இல்லையென உறுதிப்படுத்தும் கடிதம். | 250.00 |
| 3 | கொடுக்கல் வாங்கல் செய்பவரது கொடுப்பனவு வரலாறு அறிக்கை | 250.00 |
| 4 | வெளியார் நிதிக் கம்பனி தீர்ப்பனவு தொடர்பான சிட்டை | 250.00 |
| 5 | பிரதிகளை அழிப்பதற்கான கடிதம் (அனைத்து வாகனங்களுக்கும்) | 2,000.00 |
| 6 | ஆட்சேபனை இல்லை என வழங்கும் கடிதம் (NOC). | 1,000.00 |
| 7 | கடன் தீர்ப்பனவுக் கடிதம் | 750.00 |
| 8 | மூன்றாம் தரப்பு கடன் கொடுப்பவர் அல்லது கடன் பெறுபவருக்கான சிட்டை. | 1,500.00 |
| 9 | சான்றுப்படுத்தப்பட்ட பதிவுச் சான்றிதழின் பிரதி (CR புத்தகத்தின் பிரதி) | 500.00 |
| 10 | காசோலையை மீண்டும் திருப்பியனுப்பும் கட்டணம் | 2,500.00 |
| 11 | கட்டளை பிறப்பிப்பவரால் கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டதால் காசோலையை மீள அனுப்புதல். | 5,000.00 |

## 7. பெற்றுக்கொள்ளவேண்டிய பிணை காப்பு

1. மோட்டார் வாகனத்தின் அல்லது மோட்டார் சைக்கிளின் முழுமையான உரிமை
2. தனிப்பட்ட பிணையாளர்கள்

### 7.1 தேவையான ஆவணங்கள்

#### 7.1.1 தனிநபர் வாடிக்கையாளர்

1. சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் / சொத்துக்களை வெளிப்படுத்தும் படிவம்
2. தேசிய அடையாள அட்டையின் பிரதி
3. செல்லுபடியாகும் சிட்டைகளது சான்று (06 மாதங்களுக்குள்)
4. வழங்குனரின் சிட்டை / விலைமனு / விற்பனைச் சிட்டை (Performa invoice) விற்பனைக் கடிதம்
5. இலங்கை குத்தகை கம்பனிகளது சங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட வாகன மதிப்பீட்டுச் சான்றிதழ்
6. மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் உரிமை மாற்ற படிவம்
7. கடந்த 06 மாதத்தின் வங்கிக் கூற்று (தனிப்பட்ட மற்றும் வர்த்தகம்)
8. காசுப் பாய்ச்சல் கூற்று / வரவு செலவு கூற்று
9. இலங்கை கொடுகடன் தகவல் பணியகத்தின் அறிக்கை (இருந்தால் மட்டும்)
10. ஏனைய வருமானத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் / சம்பள அறிக்கை

**7.1.2 நிறுவன வாடிக்கையாளர்கள் - வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனிகள் / பட்டியலிடப்பட்ட கம்பனிகள்**

1. கம்பனிப் பதிவுச் சான்றிதழ்
2. கம்பனியின் யாப்பு
3. படிவம் 1, புதிய படிவம் 13, படிவம் 15, படிவம் 20
4. வரி செலுத்தல் பற்றுச்சீட்டுகள் / வருமான வரி (புதிய)
5. பணிப்பாளர் சபை பிரேரணைகள்
6. கடந்த 3 வருட கணக்காய்வு அறிக்கை
7. நடப்பு நிதியாண்டு முகாமைத்துவ கணக்குகள் / காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள்
8. கடந்த 6 மாத வங்கிக் கூற்றுக்கள்
9. கடன் தகவல் அறிக்கை (வர்த்தகம் / பணிப்பாளர்கள்)
10. ஏனைய தேவையான அவணங்கள்

**7.1.3 பிணையாளர்கள்**

1. சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட சொத்து வெளிப்படுத்தல் படிவம்
2. தேசிய அடையாள அட்டையின் பிரதி / செல்லுபடியான சிட்டையொன்றின் சான்று (06 மாதங்களுக்குள்
3. வருமானக் கூற்று (அண்மைய சம்பள உறுதிப்படுத்தல் கடிதம் / வங்கிக் கூற்று / வர்த்தக வருமான சான்று)

**7.1.4 பொதுவான தேவைப்பாடுகள்**

1. வசிக்கும் இடம் / வர்த்தகம் / பிணை காப்பு (கார் / சைக்கிள்) என்பனற்றின் புகைப்படம்
2. பரிசோதனை அறிக்கை

## 8. பின்பற்றப்படவேண்டிய நடைமுறைகள்

1. அனைத்து வாடிக்கையாளர்களையும் அருகிலுள்ள கிளைக்கு வருகை தருமாறு அழைப்பு விடுப்பதோடு தங்களது தேவைப்பாடுகள் குறித்து கலந்துரையாடவும் அழைக்கப்படுகிறார்கள்.
2. கலந்துரையாடலின் பின்னர், உரிய விடயங்கள் மதிப்பீடு செய்யப்படுவதுடன், வாடிக்கையாளரது தேவைக்கேற்ப உரிய நடைமுறைகள் ஆரம்பிக்கப்படும். அனுமதிக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட ஆவணத்திற்கமைய (DOA) கடன் வசதிகளுக்கான அனுமதி பெற்றுக்கொள்ளப்படும்.

## 9. பிரதான விதிமுறைகளும் நிபந்தனைகளும்

- வாகனம் / உபகரணம் குத்தகைதாரரின் பெயரில் பதிவுசெய்யப்படவேண்டியதுடன், அதன் முழுமையான உரிமையானது மேர்சன்ட் பேங்க் ஒ.்.ப் ஸ்ரீலங்கா என்ட் / பைனான்ஸ் பீஎல்சீ (MBSL) இற்கு உரிமை மாற்றம் செய்யப்படுதல் வேண்டும். வாகனத்தை MBSL ஊடாக காப்புறுதி செய்ய வேண்டியதுடன், அந்த காப்புறுதிப் பூட்கையை MBSLஇற்கு உரிமை மாற்றம் செய்தல் வேண்டும்.

- அந்த காப்புறுதியை வருடாந்தம் புதுப்பிக்க வேண்டும். காப்புறுதிப் பூட்கையைப் பெற்றுக் கொள்ளும் செலவு மற்றும் அதனை புதுப்பிக்கும் செலவு என்பன வாடிக்கையாளரால் பொறுப்பேற்கப்படல் வேண்டும்.

**10. முடிவுறுத்தல் மற்றும் அறவிடல் - சட்டரீதியான நடைமுறைக்குட்பட்டது.**

ஏதேனும் சூழ்நிலையில் குத்தகைதாரர் குத்தகை ஒப்பந்தத்தின் ஏதேனும் விதிமுறைகளுக்கு, நிபந்தனைகளுக்கு இணங்கத் தவறும் சந்தர்ப்பத்தில் மற்றும் அது குத்தகை ஒப்பந்தத்தை மீறுவதாகக் கருதப்பட்டால் குத்தகைக்கு விடுபவரினால் கீழே காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.

10.1 MBSL குத்தகை ஒப்பந்தத்தின் 22 மற்றும் 23ஆம் பந்திகளின் ஏற்பாடுகள்:

10.2 பொருந்தக்கூடிய சட்ட ஏற்பாடுகள்

சூழ்நிலைகளின் அடிப்படையில், 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைச் சட்டம்: பல்வேறு சந்தர்ப்பங்களை அடிப்படையாகக் கொண்ட கீழே காட்டப்பட்டுள்ள வழிகாட்டல்களும் கருத்திற் கொள்ளப்படும்.

1. 1982ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க நுகர்வோர் கடன் சட்டம் (Consumer Credit Act)
2. ஒப்பந்த சட்டங்கள் (Contract Law)
3. இலங்கை சிவில் மற்றும் குற்றவியல் சட்டம் (Civil & Criminal Law of Sri Lanka)

**11. முறைப்பாடுகளை கையாளும் நடைமுறைகள்**

எமது உற்பத்திகள் மற்றும் சேவைகள் தொடர்பில் வாடிக்கையாளர்கள் தமது முறைப்பாடுகளை கிழே காட்டப்பட்டுள்ள எந்தவொரு முறைமையின் ஊடாகவும் முன்வைக்கலாம்.

1. அருகிலுள்ள கிளைக்குச் சென்று கிளை முகாமையாளரிடம் தமது முறைப்பாடுகளைச் செய்யலாம்.

2. எமது வாடிக்கையாளர் சேவை துரித அழைப்பு இலக்கமான **011 - 4 711 711** ஊடாக அல்லது **info@mbslbank.com / customercare@mbslbank.com** ஆகிய மின்னஞ்சல் முகவரி ஊடாக முறைப்பாடுகளை சமர்ப்பிக்கலாம்.
3. தபால் மூலம் உங்கள் முறைப்பாடுகளை அனுப்ப வேண்டிய முகவரி:

**முறைப்பாடுகளைக் கையாளும் உத்தியோகத்தர் (பதில்கடமை),**
மேர்சன்ட் பேங்க் ஒ.ஃப் ஸ்ரீலங்கா என்ட் / பைனான்ஸ் பீஎல்சீ
இல.28, இலங்கை வங்கி மேர்சன்ட் டவர்
சென்ட் மைக்கல்ஸ் வீதி, கொழும்பு 03.

**பிரதான விடயங்கள் உள்ளடக்கப்பட்ட ஆவணம்**

**நிலைபேறான நிதி – தனிநபர் கடன்**

**மேர்சன்ட் பேங்க் ஓப் ஸ்ரீ லங்கா அன்ட் பினான்ஸ் பீஎல்சீ (MBSL)**

## 1. பொருள் / சேவை – நிலைபேறான நிதி – தனிநபர் கடன் (Sus Fin-PL)

காலநிலை மாற்றம், சமூக சமமின்மை மற்றும் வளங்களது தேய்வு போன்ற பூகோளரீதியான சவால்களுக்குத் தீர்வாக, இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குகின்ற மற்றும் சிறந்த நிலைபேறான எதிர்காலத்திற்கு பங்களிக்கின்ற நிலைபேறான நிதித் தீர்வின்பொருட்டு வளர்ந்துவரும் கேள்வியொன்று காணப்படுகின்றது.

அதற்கமைய, சூரிய சக்தி கட்டமைப்பினை கொள்வனவு செய்தலைப் பூர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டு தனிநபர் கடன் திட்டமொன்றை MBSL அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த வசதிகள் ஊடாக சோலார் பெனல் (PV) கட்டமைப்பைத் தாபித்தல், பராமரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தும் பொருட்டு நிதி ஏற்பாடுகள் வழங்கப்படுகின்றன. ஆரம்பத்தில் ஏற்றுக்கொள்ளக்கூடிய மட்டத்தில் பிரதான செயற்றிறன் குறியீடு (KPIs) கொண்ட கம்பனிகளில் சேவையாற்றுகின்ற சம்பளம் பெறுகின்ற நபர்கள் மற்றும் அரச நிறுவனங்களிலுள்ள ஊழியர்களை கவர்ந்திழுப்பதற்காக இச்சேவைகள் சந்தையில் விடப்பட்டுள்ளன.

## 2. நோக்கம்

**நிலைபேறான நிதியிடலின் அடிப்படை நோக்கங்கள்:**

அ. காலநிலை மாற்றம், உயிரியல் பல்வகைமை அழிதல், மாசு போன்ற சுற்றுச்சூழல் சவால்களுக்கான தீர்வுகளை வழங்குதல்.

ஆ. சமூக உள்ளீர்ப்பு, சமமானதன்மை மற்றும் பெதுமக்களது அடிப்படை சேவைகள் மற்றும் தேவைப்பாடுகளுக்கான அணுகுமுறையை மேம்படுத்துதல்.

இ. சுற்றுச்சூழலுக்கும், சமூகத்திற்கும் ஏற்படுகின்ற பாதகமான தாக்கங்கள் குறைவதுடன், தரப்பினருக்கு நீண்டகாலத்தில் பெறுமதி அதிகரிப்பை உருவாக்குதல்.

ஈ. வருமானத்தை உயர்த்துதல் ஊடாக பங்களிப்பினை அதிகரித்தல் மற்றும் பசுமை மாற்றத்தால் வருகின்ற புதிய வாய்ப்புகளின் ஊடாக நன்மை பெறுதல்.

உ. சுற்றுச்சூழல் மற்றும் சமூக ரீதியாக பொறுப்புக்கூறல் தன்மை உருவாக்குதல் மற்றும் அதனூடாக முன்னோக்கிப் போவதன் வழியாக நிலைபெறான தன்மையை மெச்சுகின்ற விரிவான வாடிக்கையாளர் அடிப்படையொன்றை கவர்ந்திழுப்பதற்கு இவ்வங்கியானது (MBSL) வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்ளுவதுடன், அதன் ஊடாக வைப்பு மற்றும் முதலீடுகளை அதிகரித்தல்.

ஊ. நிறுவனத்தின் பிம்பத்தை ஒட்டுமொத்தமாக மேம்படுத்திக் கொள்ளுதல் மற்றும் போட்டித்தன்மையான நன்மைகளைப் பெற்றுக் கொள்ளுதல்.

**3. தகைமை குறிகாட்டிகள்**

அ. சோலார் பெனல் கொள்வனவு மற்றும் அவற்றைப் பொருத்துவதே இந்த சேவையின் நோக்கமாக இருத்தல் வேண்டும்.

ஆ. விண்ணப்பதாரர் 18 வயதிற்கு மேற்பட்ட மற்றும் 60 வயதிற்கு குறைந்த நபராக இருத்தல் வேண்டும்.(கடன் காலவரையறை அதற்கேற்ற வகையில் அமைந்திருக்கும்.)

இ. ஒரு நிறுவனத்தில் தொழில் புரிபவராகவோ அல்லது தொழில்சார் தகைமையுள்ளவராகவோ இருத்தல் வேண்டும். (வர்த்தகர் அல்லாத)

ஈ. மாதாந்தச் சம்பளம் 150,000/-இற்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும் (அடிப்படைச் சம்பளம் + நிலையான படிகள்)

உ. கடந்த இரண்டு வருடத்தில் திருப்திகரமான கொடுகடன் தகவல் பணியகத்தின் அறிக்கை இருத்தல் வேண்டும்.

ஊ. மாதாந்த சம்பளம் அல்லது கடன் தொகையை MBSL சேமிப்புக் கணக்கிற்கு வைப்பிடுவதற்கு தொழில் தருனரிடமிருந்து பெற்றுக்கொண்ட சம்பளத்தைப் பெற்றுக்கொள்வதற்கான கடிதத்தினை (Salary undertaking letter) சமர்ப்பிக்கக்கூடிய இயலுமை இருத்தல் வேண்டும்.

எ. செல்லுபடியான காரணம் இல்லையெனின், கிளை எல்லைக்கு வெளியே அல்லது மாவட்டத்திற்கு வெளியே இவ்வசதிகள் வழங்கப்படமாட்டாது. நாடு முழுவதும் கிளைகள் இருப்பதால், கிளையினால் வாடிக்கையாளர் வசிக்கின்ற இடம் கண்டறியப்பட்டு சரியான கிளைக்கு அனுப்பப்படல் வேண்டும்.

ஏ. விண்ணப்பதாரரின் கொடுகடன் தகவல் பணியக அறிக்கையில் (ஏனைய வங்கி மற்றும் நிதி நிறுவனம் உள்ளடங்கலாக) விண்ணப்பதாரி அல்லது பிணையாளர் என்ற ரீதியில் எச்சந்தர்ப்பத்திலும் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்ட, இடைநிறுத்தப்பட்ட அல்லது பதிவழிக்கப்பட்ட கடன்கள் இருத்தல் கூடாது.

ஐ. சோலார் பெனல் வழங்குனர் "இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை" இல் பதிவுசெய்யப்பட்ட ஒரு நிறுவனமாக இருக்க வேண்டியதுடன், விண்ணப்பதாரியிடம் செல்லுபடியான அடிப்படை அனுமதிப்பத்திரம் மற்றும் ஆரம்ப விடுவிப்புக் கடிதம் இருத்தல் வேண்டும்.

ஒ. தேசிய மின்சாரக் கட்டமைப்பிற்கு பங்களிப்பு வழங்குவதாக உறுதிப்படுத்தி மின்சார சபையிலிருந்து பெற்றுக்கொண்ட அனுமதி இருத்தல் வேண்டும்.

ஓ. மின்சார சபையிலிருந்து வாடிக்கையாளருக்கு கிடைக்கவேண்டிய ஏதேனும் மேலதிக கொடுப்பனவு இருப்பின், அதனை MBSL இல் உள்ள வாடிக்கையாளர் சேமிப்புக் கணக்கிற்கு வரவு வைப்பதற்கான வழங்கல் ஒப்பந்தமொன்றை (Assignment) வாடிக்கையாளர் வழங்குதல் வேண்டும்.

**4. கடன் தொகை, வட்டி வீதங்கள் மற்றும் ஏனைய கட்டணங்கள்**

**4.1 கடன் தொகை**

ஆகக்கூடிய கடன் தொகை ரூ.2.0 மில்லியன்கள் அல்லது சிட்டையின் பெறுமதியின் 75% ஆகும். (இது கடன் சேவை காப்பு வீதம் - DSCR 40% அல்லது அதற்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும் என்பதுடன், நியதிச்சட்ட ரீதியான கொடுப்பனவுகளின் பின்னரான சம்பளம் என்ற விடயங்களின் அடிப்படையில் குறைந்தளவான பெறுமதி கருத்திற் கொள்ளப்படும்.) பிரேரிக்கப்பட்ட கடன் தவணை கழிப்பனவானது அடிப்படைச் சம்பளம் மற்றும் நிலையான படிகளது கூட்டுத்தொகையின் 60%இனை விஞ்சாது இருத்தல் வேண்டும்.

**4.2 காலப்பகுதி**

ஆகக்கூடியது 5 வருடங்கள்

**4.3 வட்டி வீதம்**

சொத்துக்களது தரம், வாடிக்கையாளரின் ஆபத்து நிலைமைகள் மற்றும் சந்தை நிலைமைகளின் அடிப்படையில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குழுவினால் (ALCO) எடுக்கப்படுகின்ற தீர்மானங்களின் அடிப்படையில் வட்டி வீதம் தீர்மானிக்கப்படும்.

### 4.4 கட்டணங்கள்

#### 4.4.1 ஆவணங்களுக்கான கட்டணங்கள்

| சேவைகளுக்கான கட்டணம் இல.ரூ. | கட்டணங்கள் இல.ரூ |
|---|---|
| இல.ரூ. 500,000/- வரை | இல.ரூ. 7,500/- |
| இல.ரூ. 500,000/- தொடக்கம் இல.ரூ 1,000,000/- வரை | இல.ரூ. 10,000/- |
| இல.ரூ. 1,000,000/- இற்கு மேற்பட்ட | ஆகக்குறைந்த கட்டணம் ரூ. 15,000/- அல்லது சேவையின் பெறுமதியில் 1% என்பதில் ஆகக் கூடியது. |

#### 4.4.2 மாதாந்த தவணைப்பணத்தைச் செலுத்தாமை அல்லது தாமதமாகச் செலுத்துதல் தொடர்பில் அறவிடப்படுகின்ற தண்ட வட்டி (இருந்தால்)

உரிய தினத்தில் தவணைப்பணம் செலுத்தத் தவறும் சந்தர்ப்பத்தில், தாமதமாகும் காலத்திற்கு ஒரு மாதத்திற்கு மூன்று வீத (3%) மேலதிக வட்டி (Overdue interest) அறவிடப்படும்.

.

### 4.5 பெற்றுக்கொண்ட வசதியை முன்னரே செலுத்துதல்.

கடன் பெற்றவரால் உரிய கடன் தொகை உரிய காலத்திற்கு முன்னர் செலுத்தப்படும் சந்தர்ப்பத்தில், அந்த வசதியின் மீதி வட்டிக்கு சலுகை வழங்குவது தொடர்பாக தீர்மானம் எடுக்கும் முழுமையான விருப்பம் மேர்சன்ட் பேங்க் ஒப் ஸ்ரீ லங்கா அன்ட் பினான்ஸ் பீஎல்சீ நிறுவனத்திற்குரியது.

### 4.6 ஏனைய கட்டணங்கள்

| இலக்கம் | அறவீடுகள் / கட்டணங்கள் தொடர்பான விபரங்கள் | அறவீடுகள் / கட்டணம் (இல.ரூபா) |
|---|---|---|
| 1 | மீதியை உறுதிப்படுத்தும் கடிதம் | 1,000.00 |
| 2 | நிலுவைகள் இல்லையென்பதற்கான கடிதம் | 250.00 |
| 3 | வாடிக்கையாளரது மீளச் செலுத்தும் வரலாறு | 250.00 |
| 4 | வெளியக நிதிக் கம்பனியின் தீர்ப்பனவுக்கான சிட்டை | 250.00 |
| 5 | கடன் தீர்ப்பனவு கடிதங்கள் | 750.00 |

### 5. ஆவணப்படுத்தல்

அ. சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட தனிப்பட்ட கடன் விண்ணப்பப்படிவம்

ஆ. கடைசி மூன்று மாதங்களுக்குள் பெறப்பட்ட அண்மைய சம்பளப் பட்டியல்களின் மூலப் பிரதி அல்லது சான்றுப்படுத்தப்பட்ட பிரதி

இ. தொழில்தருனரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தொழில் மற்றும் சம்பளத்தை உறுதிப்படுத்தும் கடிதம்.

ஈ. சான்றுப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டையின் பிரதி

உ. வசிப்பிடத்தை உறுதிப்படுத்தும் சான்றுப்படுத்தப்பட்ட ஆவணம் (06 மாதங்களுக்குட்பட்ட சிட்டைகள்)

ஊ. சம்பளம் வரவு வைக்கப்பட்டமையைக் காட்டும் இறுதி 3 மாதங்களிலான சான்றுப்படுத்தப்பட்ட வங்கிக் கூற்று

எ. வாடிக்கையாளரது மாதாந்தச் சம்பளம் அல்லது கடன் தவணைத் தொகையை சேமிப்புக் கணக்கிற்கு வரவு வைக்கப்படுகின்றது என் தொழில்தருனரிடமிருந்து பெறப்பட்ட இணக்கக் கடிதம்)

ஏ. சலுகை வட்டி வீதத்தைப் பெற்றுக் கொள்வதற்காக சோலார் பெனல் கட்டமைப்பின் சிட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். (கடன் தொகை, சிட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள வங்கி / கிளை தகவல்களின் அடிப்படையில் நேரடியாக வழங்குனருக்கு கொடுப்பனவு செய்யப்படும்.)

**6. வசிப்பிடம் தொடர்பான நிலைமை**

வாடிக்கையாளர் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும். இது தொடர்பில் எந்த விதிவிலக்குகளும் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

**7. வருமானத்தை கணக்கிடுதல்.**

கடன் சேவை காப்பு வீதத்தினைக் (DSCR) கணக்கிடுவதற்காக மாதாந்த அடிப்படைச் சம்பளம், வாழ்க்கைச் செலவுப் படி மற்றும் நிலையான படிகள் கருத்திற் கொள்ளப்படும்.

**8. பிணை (Collateral)**

அ. மாதாந்த கடன் தவணை அல்லது சம்பளத்தினை நேரடியாக MBSL இற்கு அனுப்புவதாக உறுதிப்படுத்தி தொழில்தருனரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட இணக்கக் கடிதம் (Letter of undertaking).

ஆ. கடன் வழங்கும் கடிதம்

இ. தனிப்பட்ட கடன் ஒப்பந்தம்

ஈ. பிணை ஒப்பந்தம்

உ. சோலார் பெனல் கட்டமைப்பின் / பெனல்களின் பெறுமதிக்குச் சமமான விதத்தில், MBSL இனால் அங்கீகரிக்கப்பட்ட, காப்புறுதி நிறுவனத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட தீக் காப்புறுதி ஒப்பந்தம் மற்றும் அந்தக் காப்புறுதி ஒப்பந்தத்தை MBSL இற்கு உரிமைமாற்றம் செய்தல் வேண்டும். இந்த காப்புறுதி ஒப்பந்தத்தை வருடாந்தம் புதுப்பிக்க வேண்டியதுடன், அப்படிச் செய்யத் தவறின் அதனை புதுப்பிக்கும் உரிமை MBSL இற்கு வருவதுடன், அதற்கான கட்டணமானது உங்களது கடன் கணக்கிற்கு வரவு வைக்கப்படும்.

**9. மீளச் செலுத்துதல்.**

நிலையான மாதாந்த தவணைக்கட்டணம்

## 10. பின்பற்றப்படவேண்டிய நடைமுறைகள்

1. அனைத்து வாடிக்கையாளர்களையும் அருகிலுள்ள கிளைக்கு வருகை தருமாறு அழைப்பு விடுப்பதோடு தங்களது தேவைப்பாடுகள் குறித்து கலந்துரையாடவும் அழைக்கப்படுகிறார்கள்.
2. கலந்துரையாடலின் பின்னர், உரிய விடயங்கள் மதிப்பீடு செய்யப்படுவதுடன், வாடிக்கையாளரது தேவைக்கேற்ப உரிய நடைமுறைகள் ஆரம்பிக்கப்படும்.
3. அனுமதிக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட ஆவணத்திற்கமைய (DOA) உரிய அனுமதி பெற்றுக்கொள்ளப்படும்.

## 11. உரிய சட்டரீதியான ஏற்பாடுகள்

அ. 1982ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க நுகர்வோர் கடன் சட்டம் (Consumer Credit Act)

ஆ. ஒப்பந்த சட்டங்கள் (Contract Law)

இ. இலங்கை சிவில் மற்றும் குற்றவியல் சட்டம் (Civil & Criminal Law of Sri Lanka)

## 12. பிரதான விதிமுறைகளும் நிபந்தனைகளும்

அ. விண்ணப்பதாரருக்கு முன்னறிவிப்பின்றி அல்லது வங்கிக்குத் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்த கடன் தொகையை மீளக் கோர முடியும்.

ஆ. தமது தற்போதைய தொழிலில் ஏற்படுகின்ற எந்தவொரு மாற்றம் அல்லது நிலைமைகள் தொடர்பில் MBSL நிறுவனத்தை அறிவுறுத்துவதற்கு விண்ணப்பதாரர் கடப்பாடுடையவராவார்.

இ. நிலுவைத் தொகையை அறவிடும் நோக்கில் விண்ணப்பதாரியின் சேவை நிலையத்திற்கு அல்லது வசிப்பிடத்திற்கு வருவதற்கு MBSL நிறுவனத்திற்கு அனுமதி உள்ளதோடு, அவ்வாறு வருகை தருவதற்கான கட்டணங்கள் விண்ணப்பதாரியினால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

ஈ. இந்த வசதியின் கீழ் விண்ணப்பதாரியினால் MBSLஇற்கு செலுத்தவேண்டிய கட்டணத்தை செலுத்துவதற்கு அல்லது ஒரு பகுதியைச் செலுத்துவதற்கு MBSL இடமுள்ள எந்தவொரு வைப்பு, முதலீடு அல்லது பிற வங்கிகளில் உள்ள பணத்தை ஈடு செய்வதற்கு அல்லது பயன்படுத்துவதற்கு MBSL இற்கு உரிமை உண்டு. அவ்வாறு ஈடு செய்துகொள்ளப்பட்டதன் பின்னர் அது தொடர்பான முழுமையான விபரங்களை வாடிக்கையாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

உ. இந்த சேவைக்குரிய ஏனைய அனைத்து விதிகள் மற்றும் நிபந்தனைகள் உள்ளடக்கப்படும் விதத்தில் கடன் வழங்கும் கடிதம் மற்றும் ஒப்பந்தத்தை கையொப்பமிடுதல் வேண்டும்.

ஊ. கடன் வழங்கும் கடித்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளுதல், பிணை ஆவணத்தைப் பூர்த்தி செய்தல், உரிய காப்புறுதி பூட்கையைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் ஏனைய உரிய ஏற்பாடுகள் என்பன MBSL நிறுவனமானது திருப்திப்படும் விதத்தில் நிறைவேற்றப்பட்டால் மாத்திரமே கடன் தொகையானது விடுவிக்கப்படும்.

## 13. முடிவுறுத்தல் மற்றும் அறவிடல் - சட்டரீதியான நடைமுறைக்குட்பட்டது.

இங்கு மேலே காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய MBSL நிறுவனத்தினால் இந்த சேவைகள் இடைநிறுத்தப்படும் சந்தர்ப்பத்தில், விண்ணப்பதாரருக்கு மற்றும் / அல்லது பிணையாளருக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு MBSLஇற்கு உரிமையுள்ளது. அதன்போது MBSLஇற்கு கொடுப்பனவு செய்யவேண்டியுள்ள நிலுவைத் தொகை மற்றும் முத்திரைக் கட்டணம், சட்டக் கட்டணம், மற்றும் சட்டரீதியான நடைமுறைகளுக்கு செலவிடப்பட்ட அனைத்து கட்டணங்களும் அறவிடப்படும்.

## 14. முறைப்பாடுகளை கையாளும் நடைமுறைகள்

எமது உற்பத்திகள் மற்றும் சேவைகள் தொடர்பில் வாடிக்கையாளர்கள் தமது முறைப்பாடுகளை கீழே காட்டப்பட்டுள்ள எந்தவொரு முறைமையின் ஊடாகவும் முன்வைக்கலாம்.

1. அருகிலுள்ள கிளைக்குச் சென்று கிளை முகாமையாளரிடம் தமது முறைப்பாடுகளைச் செய்யலாம்.

2. எமது வாடிக்கையாளர் சேவை துரித அழைப்பு இலக்கமான **011 - 4 711 711** ஊடாக அல்லது **info@mbslbank.com / customercare@mbslbank.com** ஆகிய மின்னஞ்சல் முகவரி ஊடாக முறைப்பாடுகளை சமர்ப்பிக்கலாம்.
3. தபால் மூலம் உங்கள் முறைப்பாடுகளை அனுப்ப வேண்டிய முகவரி:

   **முறைப்பாடுகளைக் கையாளும் உத்தியோகத்தர் (பதில்கடமை),**
   மேர்சன்ட் பேங்க் ஒ.ஃ.ப் ஸ்ரீலங்கா என்ட் / பைனான்ஸ் பீஎல்சீ
   இல.28, இலங்கை வங்கி மேர்சன்ட் டவர்
   சென்ட் மைக்கல்ஸ் வீதி, கொழும்பு 03.

**பிரதான விடயங்கள் உள்ளடக்கப்பட்ட ஆவணம்**

**நிலைபேறான நிதி – தவணைக் கடன்**

**மேர்சன்ட் பேங்க் ஓப் ஸ்ரீ லங்கா அன்ட் பினான்ஸ் பீஎல்சீ (MBSL)**

## 1. பொருள் / சேவை – நிலைபேறான நிதி – தவணைக் கடன் (Sus Fin-TL)

காலநிலை மாற்றம், சமூக சமமின்மை மற்றும் வளங்களது தேய்வு போன்ற பூகோளரீதியான சவால்களுக்குத் தீர்வாக, இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குகின்ற மற்றும் சிறந்த நிலைபேறான எதிர்காலத்திற்கு பங்களிக்கின்ற நிலைபேறான நிதித் தீர்வின்பொருட்டு இது வளர்ந்துவரும் கேள்வியொன்றாகக் காணப்படுகின்றது.

அதற்கமைய, சூரிய சக்தி கட்டமைப்பினை கொள்வனவு செய்து பொருத்துவதற்கு செலவாகின்ற அடிப்படை செலவினை தீர்ப்பனவு செய்வதை நோக்கமாகக் கொண்ட தவணைக் கடன் திட்டமொன்று MBSL இனால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சேவையின் ஊடாக சோலார் பெனல் கட்டமைப்பினை நிறுவுதல், பராமரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நிதி வசதிகளை வழங்குதல்.

## 2. பிரதான அம்சம் மற்றும் பயன்கள்

அ. கவர்ச்சிகரமான வட்டி வீதம்
ஆ.குறைந்த காலத்தில் கடனை விடுவித்தல்
இ. 84 மாதங்கள் (07 வருடம்) மீளச் செலுத்தும் கால அவகாசம்
ஈ. உடனடி வாடிக்கையாளர் சேவை.

## 3. தகைமைகள்

- தனிப்பட்ட பயன்பாட்டிற்காகு விண்ணப்பிக்கின்ற நபர்கள் (18 வயதிற்கு மேற்பட்ட மற்றும் 65 வயதிற்குக் குறைந்த) மற்றும் 2022 ஆம் ஆண்டு மே மாதம் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட ''இலங்கையின் பசுமை நிதி வகைப்படுத்தலின்'' கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வியாபார துறைகளிலும் நடைமுறையிலுள்ள வர்த்தக நிறுவனங்கள்/தனிநபர் வியாபாரம்/பங்குடமைகள்/வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனிகள் இதற்கான தகைமையைப் பெறுகின்றன.
- இதன் நோக்கம் சோலார் பெனல் கட்டமைப்பினை கொள்வனவு செய்து பொருத்துதல் அல்லது நிலைபேறான கருத்திட்டத்திற்குத் தேவையான தொழிற்பாட்டு மூலதனத் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்வதாக இருத்தல் வேண்டும்.
- அங்கீகரிக்கக்கூடிய / உறுதிப்படுத்தக்கூடிய கடன் மீளச் செலுத்தும் இயலுமை இருத்தல் வேண்டும்.
- திருப்திகரமான கடந்தகாலக் கொடுப்பனவு வரலாறு இருத்தல் வேண்டும். (கொடுகடன் தகவல் பணியக அறிக்கை)

## 4. கடன் தொகை, வட்டி வீதங்கள் மற்றும் ஏனைய கட்டணங்கள்

### 4.1 கடன் தொகை

சிட்டையின் பெறுமதியில் 75% வரையான தொகை அல்லது பிணையாக வைக்கும் அசையாச் சொத்தின் பெறுமதி (விண்ணப்பதாரியின் மீளச் செலுத்தும் ஆற்றலின் அடிப்படையில் பொருத்தமெனின் வற் வரியும் உள்ளடங்கலாக), ஆகிய இவற்றில் குறைந்த தொகை கடன் தொகையாகக் கருதப்படும்.

**4.2 காலப்பகுதி**

ஆகக்கூடியது 7 வருடங்கள் (84 மாதங்கள்)

**4.3 வட்டி வீதம்**

சொத்துக்களது தரம், வாடிக்கையாளரின் ஆபத்து நிலைமைகள் மற்றும் சந்தை நிலைமைகளின் அடிப்படையில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குழுவினால் (ALCO) எடுக்கப்படுகின்ற தீர்மானங்களின் அடிப்படையில் வட்டி வீதம் தீர்மானிக்கப்படும்.

**4.4 கட்டணங்கள்**

**4.4.1 ஆவணங்களுக்கான கட்டணங்கள்**

| | |
|---|---|
| இல.ரூ. மில்லியன் 1.0 வரை | இல.ரூ. 7,500.00 |
| இல.ரூ. மில்லியன் 1.0 - இல.ரூ. மில்லியன் 5.0 | இல.ரூ. 15,000.00 |
| இல.ரூ. மில்லியன் 5.0 மற்றும் ≤ இல.ரூ. மில்லியன் 12.5 | இல.ரூ. 30,000.00 |
| இல.ரூ. மில்லியன் 12.5 மற்றும் ≤ இல.ரூ.மில்லியன் 15 | ஆகக்குறைந்தது இல.ரூ.35,000<br>ஆகக்கூடியது இல.ரூ.50,000 |
| இல.ரூ. மில்லியன் 15 | ஆகக்குறைந்தது இல.ரூ..50,000/- |

**4.4.2. சட்டரீதியான கட்டணங்கள்**

பிணையாக சமர்ப்பிக்கின்ற அசையாச் சொத்துக்களது உரிமையை மதிப்பீடு செய்தல் மற்றும் உரிமை அறிக்கையைத் தயாரிப்பதற்கு சபை வழக்கறிஞர்களுக்கு கொடுப்பனவு செய்யப்படவேண்டிய கட்டணங்கள் மற்றும் உயர் உறுதியைத் தயாரித்தல் மற்றும் கையொப்பமிடுவதற்கு MBSL மற்றும் சபையின் வழக்கறிஞர்களினால் அறவிடப்படுகின்ற கட்டணங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன:

1. உரிமையைப் பரிசோதித்தல் மற்றும் உரிமை அறிக்கையைத் தயாரிப்பதற்கு - ரூ. 7,500/-.
2. அடகு உறுதியைத் தயாரித்தல் மற்றும் கையொப்பமிடுவதற்கான சட்டக் கட்டணம் - சேவையின் பெறுமதியில் 1% ஆகும். (ஆகக்குறைந்தது ரூ. 10,000.00 ஆகக்கூடியது ரூ. 1,000,000.00).

**4.4.3. மாதாந்த தவணைப்பணத்தைச் செலுத்தாமை அல்லது தாமதமாகச் செலுத்துதல் தொடர்பில் அறவிடப்படுகின்ற தண்ட வட்டி (இருந்தால்)**

உரிய தினத்தில் தவணைப்பணம் செலுத்தத் தவறும் சந்தர்ப்பத்தில், தாமதமாகும் காலத்திற்கு ஒரு மாதத்திற்கு மூன்று வீத (3%) மேலதிக வட்டி (Overdue interest) அறவிடப்படும்.

**4.4.4. பெற்றுக்கொண்ட வசதியை முன்னரே செலுத்துதல்.**

கடன் பெற்றவரால் உரிய கடன் தொகை உரிய காலத்திற்கு முன்னர் செலுத்தப்படும் சந்தர்ப்பத்தில், அந்த வசதியின் மீதி வட்டிக்கு சலுகை வழங்குவது தொடர்பாக தீர்மானம் எடுக்கும் முழுமையான விருப்பம் மேர்சன்ட் பேங்க் ஒப் ஶ்ரீ லங்கா அன்ட் பினான்ஸ் பீஎல்சீ நிறுவனத்திற்குரியது.

**4.4.5 ஏனைய கட்டணங்கள்**

| இலக்கம் | அறவீடுகள் / கட்டணங்கள் தொடர்பான விபரங்கள் | அறவீடுகள் / கட்டணம் (இல.ரூபா) |
|---|---|---|
| 1 | மீதியை உறுதிப்படுத்தும் கடிதம் | 1,000.00 |
| 2 | உறுதி மற்றும் திட்ட வரைபடங்களது சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் | 750.00 |
| 3 | நிலுவைகள் இல்லையென்பதற்கான கடிதம் | 250.00 |
| 4 | வாடிக்கையாளரது மீளச் செலுத்தும் வரலாறு | 250.00 |
| 5 | வெளியக நிதிக் கம்பனியின் தீர்ப்பனவுக்கான சிட்டை | 250.00 |
| 6 | கடன் தீர்ப்பனவு கடிதங்கள் | 750.00 |
| 7 | மூன்றாம் தரப்பு கடன் கொடுப்பவர் / கடன் எடுப்பவருக்கு வழங்குகின்ற சிட்டை | 1,500.00 |
| 8 | காசோலை திருப்பி அனுப்பும் கட்டணம் | 2,500.00 |
| 9 | காசோலை மீளத் திருப்பம் - கட்டளை பிறப்பித்தவர் கொடுப்பனவை நிறுத்துதல். | 5,000.00 |
| 10 | விடுவிக்கும் உறுதி (தொலைந்த) தயாரித்தல் மற்றும் கையொப்பம் இடுவதற்கான சட்டக் கட்டணம் | 7,500.00 |

**5. பெற்றுக்கொள்ள வேண்டிய பிணை மற்றும் வழங்கப்படுகின்ற நிதி வெளிப்பாடு**

அ. அசையாச் சொத்துக்களை அடகு வைத்தல் - பொதுவான தவணைக் கடன் வசதியொன்றை (Term Loan) வழங்கும்போது போன்று அனைத்து சட்டரீதியான ஆவணங்கள் / தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்.

ஆ. நிதி வெளிப்பாடு: சிட்டையின் பெறுமதியின் மொத்தத் தொகையின் 75% வரை அல்லது பிணையில் வைத்துள்ள அசையாச் சொத்தின் பெறுமதியின் 75% வரை (விண்ணப்பதாரியின் மீளச் செலுத்தும் இயலுமையின் அடிப்படையில், பொருத்தமெனின் பெறுமதிசேர் வரி (VAT) உள்ளடங்கலாக) ஆகிய இரண்டில் ஆகக் குறைந்தது.

**6. விசேட / பிற நிபந்தனைகள்**

அ. சோலார் பெனல் கட்டமைப்பு பொருத்தப்படுகின்ற சொத்தானது, உரிமையாளருக்கு உரிமையுள்ளதாக இருத்தல்.

ஆ. சொத்தின் உரிமை அல்லது 99 வருட குத்தகை ஒப்பந்தம் (உறுதிப்படுத்தும் கடிதங்கள் அவசியமாகும்)

இ. வாடிக்கையாளரது தேவையின் அடிப்படையில் அல்லது அனுமதிக்கும் அதிகாரியின் தீர்மானத்திற்கமைய கட்டம் கட்டமாக கொடுப்பனவுகளை விடுவித்தல்.

**7. பின்பற்றப்படவேண்டிய நடைமுறைகள்**

1. அனைத்து வாடிக்கையாளர்களையும் அருகிலுள்ள கிளைக்கு வருகை தருமாறு அழைப்பு விடுப்பதோடு தங்களது தேவைப்பாடுகள் குறித்துக் கலந்துரையாடவும் அழைக்கப்படுகிறார்கள்.

2. கலந்துரையாடலின் பின்னர், உரிய விடயங்கள் மதிப்பீடு செய்யப்படுவதுடன், வாடிக்கையாளரது தேவைக்கேற்ப உரிய நடைமுறைகள் ஆரம்பிக்கப்படும்.

3. அனுமதிக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட ஆவணத்திற்கமைய (DOA) உரிய அனுமதி பெற்றுக்கொள்ளப்படும்.
4. கடன் கொள்கையின்/நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய அனைத்து தேவைப்பாடுகளுக்கும் பொருந்தும்.

## 8. தேவையான ஆவணங்கள்

### 8.1 தனிநபர் வாடிக்கையாளர்

அ. சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் / சொத்துக்கள் பிரகடனப் படிவம்
ஆ. சான்றுப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அடடையின் பிரதி
இ. சான்றுப்படுத்தப்பட்ட வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சிட்டை (6 மாதங்களுக்குள்)
ஈ. கடந்த 6 மாதங்களுக்கான வங்கிக் கூற்று (தனிப்பட்ட மற்றும் வர்த்தக)
உ. காசுப்பாய்ச்சல கூற்று / வருமான செலவுக் கூற்று / வருமானத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஏனைய ஆவணங்கள்
ஊ. கொடுகடன் தகவல் பணியக அறிக்கை (தனிப்பட்ட மற்றும் வர்த்தக)
எ. சான்றுப்படுத்தப்பட்ட வியாபாரப் பதிவுச் சான்றிதழ் பிரதி (இருந்தால்)

### 8.2 நிறுவன வாடிக்கையாளர்கள் - வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனிகள் / பட்டியலிடப்பட்ட கம்பனிகள்

அ. நிறுவனம் தாபிக்கப்பட்ட சான்றிதழ்
ஆ. நிறுவனத்தின் யாப்பு
இ. 1ஆம் படிவம், புதிய 13ஆம் படிவம், 15ஆம் படிவம் மற்றும் 20ஆம் படிவங்களது பிரதிகள்
ஈ. வரி செலுத்தியமைக்கான சிட்டை / வருமான வரி (புதிய)
உ. பணிப்பாளர் சபை பிரேரணை
ஊ. கடந்த மூன்று வருடங்கள் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கு அறிக்கை
எ. நடப்பு ஆண்டின் முகாமைத்துவ கணக்கு / நிதிப்பாய்ச்சல் கூற்று
ஏ. கடந்த 6 மாதத்தின் வங்கிக் கூற்று
ஐ.கொடுகடன் தகவல் பணியன அறிக்கை (வர்த்தகம் / பணிப்பாளர்களது)
ஒ. தேவையான பிற ஆவணங்கள்

### 8.3 பிணை தொடர்பான ஆவணங்கள் - சொத்துப் பிணை

அ. தற்போதைய உரிமையாளரது மூல உறுதி
ஆ. 10 வருடங்களுக்குள் தயாரிக்கப்பட்ட மூல அளவை வரைபடம் (10 அடிக்கு மேற்பட்ட அகலத்தைக் கொண்ட பிரவேசப் பாதை)
இ. உள்ளூர் அதிகாரசபை ஆவணங்கள் மற்றும் வரி பற்றுச்சீட்டு
ஈ. 30 வருட சான்றுப்படுத்தப்பட்ட காணி பதிவு படிவம் - Extracts)
உ. உரிமைச் சான்றிதழ் - தேவைப்பட்டால்
ஊ. சபை மதிப்பீட்டாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு அறிக்கை
எ. தேவையெனின் விருப்பத்தை வெளிப்படுத்தும் கடிதம் / துண்டுப்படுத்தல் / காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம்
ஏ. அனுமதிக்கப்பட்ட கட்டிட திட்ட வரைபடம்
ஐ. அனுமதிக்கும் அதிகாரிகளால் / முகாமைத்துவத்தினால் கோரப்படுகின்ற பிற ஏதேனுமொரு ஆவணம்

8.4 கீழே காட்டப்பட்டுள்ள ஆவணங்களை மேலதிகமாக சமர்ப்பித்தல் வேண்டும்.

அ. விற்பனையாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட சிட்டை (VAT உரித்தெனின் முதலாவது வரி சிட்டை)

ஆ. சோலார் பெனல் வழங்குனர் ''இலங்கை நிலைபேறான வலுசக்தி அதிகாரசபை'' (SLSEA) இல் பதிவுசெய்யப்பட்ட ஒரு நிறுவனமாக இருத்தல் வேண்டும்.

இ. தேசிய மின்சாரக் கட்டமைப்பிற்கு வழங்குகின்ற பங்களிப்பை உறுதிப்படுத்தி மின்சாரசபையிலிருந்து பெற்றுக்கொண்ட அனுமதி

ஈ. வாடிக்கையாளரால் மேற்கொள்ளப்படுகின்ற உரிமை மாற்றம் அதாவது மின்சார சபையினால் வாடிக்கையாளருக்கு கிடைக்கும் கொடுப்பனவு MBSL இல் உள்ள வாடிக்கையாளரது சேமிப்புக் கணக்கிற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

உ. அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதி நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் MBSL இற்கு உரிமை மாற்றம் செய்யப்பட்ட பூரண காப்புறுதி சான்றிதழ் (விண்ணப்பதாரருக்கு மற்றும் கடன் தொகையின் அடிப்படையில் மதிப்பீட்டு அறிக்கையில் மதிப்பீட்டாளரால் குறிப்பிடப்பட்டிருந்தால் சொத்துக்களுக்கு)

9. பொதுவான தேவைப்பாடுகள்

அ. சோலார் பெனல் கட்டமைப்பு பொருத்தப்படுகின்ற சொத்துக்கள் விண்ணப்பதாரருக்குச் சொந்தமாக இருத்தல் வேண்டும்.

ஆ. சொத்தின் உரிமை மற்றும் 99 வருட குத்தகை ஒப்பந்தத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் தேவைப்படும்.)

இ.வாடிக்கையாளரது தேவையின் அடிப்படையில் அல்லது அனுமதிக்கும் அதிகாரியின் தீர்மானத்தின் அடிப்படையில் கட்டம் கட்டமாக கொடுப்பனவுகளை விடுவித்தல்.

ஈ. கடன் கொள்கை நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய அனைத்து தேவைப்பாடுகளும் பொருந்தும்.

10. முக்கிய விதிமுறைகளும் நிபந்தனைகளும்

அ. விண்ணப்பதாரர்களுக்கு முன்னறிவிக்காது அல்லது மேர்சன்ட் பேங்க் ஒ.ஃப் ஸ்ரீலங்கா அன்ட் பைனான்ஸ் பீஎல்சி (MBSL) இற்கு தேவைப்படும் எந்த நேரத்திலும் கோரிக்கையின் பேரில் கடன் திருப்பிச் செலுத்தப்படும்.

ஆ. அரசாங்கத்தினால் கடன் வசதிகள் அல்லது அதன் மீதான வட்டி தொடர்பில் ஏதேனும் வரி அல்லது பிற ஏதேனும் சட்டரீதியான கட்டணங்கள் விதிக்கப்பட்டால், அந்த வரி மற்றும் கட்டணங்களை விண்ணப்பதாரி ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

இ. குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் மீது MBSL இலிருந்து எழுத்துமூலமான முன் ஒப்புதல் இல்லாமல் தற்போதைக்கு விண்ணப்பதாரர்கள் அனுபவிக்கும் எந்தவொரு உரிமையையும் குத்தகைக்கு விடவோ, வாடகைக்கு விடவோ அல்லது மாற்றவோ விண்ணப்பதாரர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

ஈ. MBSL இற்கு பாதுகாப்பிற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள சொத்தின் மீது பிற ஏதேனும் அடகு, குத்தகை உரிமை அல்லது பிற ஏதேனும் தடைகளை ஏற்படுத்துவதற்கு அல்லது ஏற்படுத்துவதற்கு ஏதுவாக விண்ணப்பதாரி செயற்படுதல் கூடாது.

உ. விண்ணப்பதாரியின் வர்த்தக அமைவிடம் அல்லது வதிவிடத்தை பரிசோதிக்கும் நோக்கில், வர்த்தகம் அல்லது கணக்கு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளைப் பரிசோதிப்பதற்கு அல்லது MBSL இற்கு கொடுப்பனவு செய்யப்படவேண்டிய ஏதேனும் தொகையை அறவிட வருவதற்கு MBSL இன் உத்தியோகத்தர்களுக்கு உரிமை உள்ளதுடன், அத்தகைய வருகைக் கட்டணத்தை விண்ணப்பதாரி செலுத்துதல் வேண்டும்.

ஊ. விண்ணப்பதாரியினால் MBSL இற்கு அப்போது கொடுப்பனவு செய்யப்படவேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்யப்படவுள்ள தொகையை இந்த சேவையின் கீழ் தீர்ப்பதற்கு அல்லது பகுதியளவில் தீர்ப்பதற்கு, MBSL புத்தகங்களில் உள்ள ஏதேனும் வைப்பு அல்லது முதலீட்டு கணக்கில் அல்லது பிற ஏதேனும் கணக்கில் அல்லது கணக்குகளில் உள்ள பணத்தை ஈடு செய்வதற்கு, பயன்படுத்துவதற்கு, ஈடுபடுத்துவதற்கு மற்றும் / அல்லது ஒதுக்குவதற்கு MBSL இற்கு உரிமை உள்ளதுடன், அந்தத் தொகையை MBSL இற்கு உள்ள எந்தவொரு குறித்த அல்லது எதிர்கால பொறுப்பினைத் தீர்ப்பதற்கு பயன்படுத்துவதற்கு அல்லது தடுத்து வைப்பதற்கு இயலுமை உண்டு. ஏதேனும் ஈடு செய்யும் உரிமையை நடைமுறைப்படுத்தியவுடன், அல்லது நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிட்டவுடன், அது தொடர்பில் முழுமையான விபரங்கள் உள்ளடங்கலாக MBSL இனால் விண்ணப்பதாரருக்கு அறிவித்தல் வேண்டும்.

எ. சேவைக்கு உரிய ஏனைய அனைத்து நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் உள்ளிட்ட தவணைக் கடன் வழங்கும் கடிதம் மற்றும் ஒப்பந்தத்தை கையொப்பமிடுதல் வேண்டும்.

ஏ. வழங்கல் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை ஏற்றுக்கொள்ளுதல், பிணை ஆவணங்களை பூர்த்திசெய்தல், உரிய காப்புறுதி கொள்கைகளைப் பெற்றுக்கொள்ளுதல் (கடன் குறைகின்ற காப்புறுதி/தீ/உரிமைக் காப்புறுதி கொள்கை) மற்றும் MBSL திருப்தியடையும் விதத்தில் ஏனைய உரிய ஏற்பாடுகளை பூர்த்தி செய்தலின் மீது கடன் தொகை விடுவித்தலானது தங்கியுள்ளது.

ஐ. அனைத்து காப்புறுதி கொள்கைகளையும் (உரிய விதத்தில்) MBSL இற்கு உரிமை மாற்றம் செய்தல் வேண்டும். அந்தக் கொள்கையை வருடாந்தம் புதுப்பிக்க வேண்டியதுடன், அவ்வாறு செய்யத் தவறின் அதனைப் புதுப்பிக்கும் உரிமை MBSL இற்கு கிடைப்பதுடன் அதற்கான கட்டணம் உங்களது கடன் கணக்கிற்கு வரவு வைக்கப்படும்.

**<u>11. முடிவுறுத்தல் மற்றும் அறவிடல் - சட்டரீதியான நடைமுறைக்குட்பட்டது.</u>**

இங்கு மேலே காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய MBSL நிறுவனத்தினால் இந்த சேவைகள் இடைநிறுத்தப்படும் சந்தர்ப்பத்தில், விண்ணப்பதாரருக்கு மற்றும் / அல்லது பிணையாளருக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு MBSLஇற்கு உரிமையுள்ளது. அதன்போது MBSLஇற்கு கொடுப்பனவு செய்யவேண்டியுள்ள நிலுவைத் தொகை மற்றும் முத்திரைக் கட்டணம், சட்டக் கட்டணம், மற்றும் சட்டரீதியான நடைமுறைகளுக்கு செலவிடப்பட்ட அனைத்து கட்டணங்களையும் அறவிடுவதற்கும், வழங்கப்பட்டுள்ள பிணை காப்பினை உடமை மாற்றம் செய்வதற்கும் (Foreclose) MBSL நிறுவனத்திற்கு உரிமையுண்டு.

**<u>11.1. பொருந்தக்கூடிய சட்ட ஏற்பாடுகள்</u>**

i. 1946ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க திருத்தப்பட்ட ஈட்டுக் கடன் சட்டம்
ii. 1982ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க நுகர்வோர் கடன் சட்டம்
iii. ஒப்பந்த சட்டங்கள்
iv. இலங்கை சிவில் மற்றும் குற்றவியல் சட்டம்
v. 2009ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க பாதுகாப்பான பரிவர்த்தனைகள் சட்டம்

vi. 1998ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க உறுதிப்பத்திரங்களைப் பதிவு செய்யும் சட்டம்
vii. 1995ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க நடுவர் மன்ற சட்டம்
viii. 1988ஆம் ஆண்டின் 72ஆம் இலக்க மத்தியஸ்த சபை சட்டம்
ix. 1990ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க கடன் அறவீட்டு (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
x. 1990ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க உள்நாட்டு நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச்சீட்டுக்கள் சட்டம்
xi. 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டம்
xii. 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம்

## 12. முறைப்பாடுகளை கையாளும் நடைமுறைகள்

எமது உற்பத்திகள் மற்றும் சேவைகள் தொடர்பில் வாடிக்கையாளர்கள் தமது முறைப்பாடுகளை கிழே காட்டப்பட்டுள்ள எந்தவொரு முறைமையின் ஊடாகவும் முன்வைக்கலாம்.

1. அருகிலுள்ள கிளைக்குச் சென்று கிளை முகாமையாளரிடம் தமது முறைப்பாடுகளைச் செய்யலாம்.

2. எமது வாடிக்கையாளர் சேவை துரித அழைப்பு இலக்கமான **011 - 4 711 711** ஊடாக அல்லது **info@mbslbank.com / customercare@mbslbank.com** ஆகிய மின்னஞ்சல் முகவரி ஊடாக முறைப்பாடுகளை சமர்ப்பிக்கலாம்.

3. தபால் மூலம் உங்கள் முறைப்பாடுகளை அனுப்ப வேண்டிய முகவரி:

   **முறைப்பாடுகளைக் கையாளும் உத்தியோகத்தர் (பதில்கடமை),**
   மேர்சன்ட் பேங்க் ஒ.ஃ.ப் ஸ்ரீலங்கா என்ட் / பைனான்ஸ் பீஎல்சீ
   இல.28, இலங்கை வங்கி மேர்சன்ட் டவர்
   சென்ட் மைக்கல்ஸ் வீதி, கொழும்பு 03.